Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 339

செவ்வாய்க்கிழமை 31 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 14 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## மின்சாரசபை பணியாளர் விபத்தில் உயிரிழப்பு



வவுனியா, ஒக். 31

வவுனியா - மன்னார் வீதியில் வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள பாதசாரிகள் கடவையில் ஏற்பட்ட விபத்தில் மின்சார »11

## பாதீட்டில் அரச ஊழியருக்கு சம்பள உயர்வு நிச்சயம்!

### அமைச்சரவைக் கூட்டத்தில் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 31

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், அனைத்து அரச ஊழியர்களுக்கும் வரவு - செலவுத் திட்டம் ஊடாக சம்பள உயர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவைக்கு நேற்றுத் தெரியப் படுத்தியுள்ளார். »11

## சீனாவிலிருந்து மீன் இறக்குமதி: வடக்கு மீனவர் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வட »11

## பிரச்சினைக்குத் தீர்வுகாண 'அஸ்வெசும வாரம்'

கொழும்பு, ஒக். 31

அஸ்வெசும நன்மைகள் திட்டத்தில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, எதிர்வரும் »11




## வவுனியாவில் திருடப்பட்ட ஐம்பொன்சிலை யாழில் மீட்பு!

சந்தேகநபர் தப்பியோட்டம்

### வடமராட்சி கிழக்கில்

## வெள்ளை வானில் சென்றவர்களால் பணம் மற்றும் ஆவணம் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஒக். 31

வடமராட்சி கிழக்கு,வத்திராயனில் வெள்ளை வானில் சென்ற சிலர் வீடொன்றுக்குள் புகுந்து வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி ஆவணங்கள் மற்றும் பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். »11

## வடக்கிலும் அரச ஊழியர்கள் சம்பள உயர்வுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 31

20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி அரச பணியாளர்களால் நாடு முழுவதும் நேற்று மதியம் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட »10

### இலங்கையில்

## இறப்பு அதிகரிப்பு பிறப்பு விகிதம் சரிவு

கொழும்பு, ஒக். 31

நாட்டில் இறப்பு எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் »11

### வடக்கில் விகாரைகளை பாதுகாக்க

## உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு, ஒக். 31

வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள தொல்பொருள் பெறுமதியுடன் கூடிய விகாரைகளை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டத்தை »11

### கொக்குத்தொடுவாய்

## மனிதப்புதைகுழி அகழ்வு நவம்பர் 20இல் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஒக். 31

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி மீண்டும் நவம்பர் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. »11



## சிங்களக் குடியேறிகளின் வெறிச் செயல்; வாய்வெடி மூலம் பசு வதை

### மயிலத்தமடுவில் தொடரும் அட்டூழியம்!

மட்டக்களப்பு, ஒக். 31

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பகுதியில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட கால்நடைகளை வாய் வெடி மூலம் படுகாயப்படுத்தி சிங்களக் குடியேற்றவாசிகள் »11

## சம்பந்தன் தமிழர்களின் அடையாளம் அவரின் வெற்றிடத்துக்கு யாருமில்லை

### சுமந்திரனுடன் மல்லுக்கட்டும் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக். 31

வெளி உலகம் இரா.சம்பந்தனை ஒரு பக்கச்சார்பற்ற ஒரு நம்பகமான தமிழ்த் தலைவராக நினைக்கின்றது. அவரைப்புறக்கணிக்கவோ நீக்கவோ முனைவது தமிழ் மக்களுக்கு »10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக வங்கிக் குழுவினர் யாழுக்கு நேற்று வருகை!

யாழ்ப்பாணம், ஒக். 31

இலங்கை வந்துள்ள உலக வங்கிக் குழுவினர், நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தந்தனர்.

உலக வங்கியின் நிதியுதவியில், கோப்பாய்ப் பிரதேச மருத்துவமனையில் இடம்பெறும் வேலைத்திட்டத்தை இந்தக் குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் உள்ளிட்ட பலரும் குறித்த விஜயத்தின் போது கலந்துகொண்டனர்.

இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் மாநாட்டிலும் இந்தக் குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-20-100)

# கடல் வளத்தை விற்பதற்கே புதிய கடற்றொழில் சட்டம்!

## மீனவர் சமூகமே விழிப்படையுங்கள் என்று மீனவத் தொழிற்சங்கச் செயலர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஒக். 31**

**மீனவர் சமூகத்தை தமது தொழில் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு அருகதை அற்றவர்களாக கட்டிப்போட்டு - இலங்கையின் கடல் வளத்தை பல்தேசிய நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கவே புதிய கடற்றொழில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது. இதை எதிர்ப்பதற்கு ஒட்டுமொத்த மீனவர் சமூகங்களும் தயாராகவேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் மீனவ தொழிற்சங்கத்தின் செயலர்.**

வடமாகாண மீனவ அமைப்புகளுடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய கடற்றொழில் சட்டம் நிறைவேறுமானால் இலங்கையின் வளமான கடற்பரப்புகள் வெளிநாட்டு சக்திகளிடம் சென்றடைந்து விடும். சுதந்திரமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற மீனவ சமூகத்தை மீன்பிடியிலிருந்து அப்புறப்படுத்தி வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகளுக்கு எமது கடல் வளத்தைத் தாரை வார்க்கும் நோக்கில் இந்த முயற்சி முன்னெடுக்கப் படுகிறது.

நாம் 1996ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கடற்றொழில் சட்டத்தில் திருத்தம் செய்து இழுவைமடித் தொழிலை முற்றாக தடைசெய்யுமாறு பல தடவைகள் அரசைக் கோரிவரும் நிலையில் இதுவரை அதை நிறைவேற்றவில்லை.

ஆனால் தற்போது மீனவ சமூகங்களோ சமாசங்களோ கோராத புதிய கடற்றொழில் சட்டம் கொண்டுவரப் படுகிறது. இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று இடங்களையும் இயற்கை வளங்களையும் அந்நிய நாடுகளுக்கு விற்றுவிட்ட நிலையில் எஞ்சிய கடல் வளத்தையும் வெளிநாடுகளுக்கு விற்பதற்கு புதிய சட்டத்தின் ஊடாக வழி வகுக்கப்படுகிறது.

எனவே ஆபத்தான இந்த கடற்றொழில் சட்டத்தை எதிர்ப்பதற்கு இலங்கையிலுள்ள ஒட்டுமொத்த மீனவர் சமூகங்களும் விழிப்படைய வேண்டும் - என்றார். (ச-27)

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல்

# ஹக்கீமின் கருத்து அப்பட்டமான பொய்

## கொழும்பு பேராயர் இல்லம் அறிக்கை

கொழும்பு, ஒக். 31

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இஸ்ரேல் உள்ளது என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தன்னிடம் கூறினார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் வெளியிட்டுள்ள கருத்தை முற்றாக நிராகரிக்கின்றோம். இது அப்பட்டமான பொய்யாகும். பேராயர் ஒருபோதும் அவ்வாறு கூறவில்லை இவ்வாறு கொழும்பு பேராயர் இல்லத்தின் பொதுமக்கள் மற்றும் தொடர்பாடல் பணிப்பாளர் அருட் தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் வைத்து தன்னால் வெளியிடப்பட்ட கருத்தை ரவூப் ஹக்கீம் மீளப்பெற வேண்டும். பேராயரை தான் சந்தித்தபோது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலை முஸ்லிம் அடிப்படைவாதிகள் நடத்தவில்லை எனவும், மத்திய கிழக்கு நாடொன்று குறிப்பாக இஸ்ரேல்தான் இதன் பின்னணியில் உள்ளது எனக் கூறினார் என்று ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாப்பரசரை சந்திப்பதற்காக பேராயர் தற்போது வத்திக்கானுக்கு சென்றுள்ளார். இந்த அறிவிப்பை தான் கண்டிக்கின்றேன் என்று அறிவிக்குமாறு அவர் எனக்குத் தெரியப்படுத்தினார். பேராயர் ஒருபோதும் இப்படியானதொரு அறிவிப்பை விடுக்கவில்லை. அண்மித்த காலப்பகுதியில் முஸ்லிம் அரசியல்வாதிகளை அவர் சந்திக்கவும் இல்லை.

இஸ்ரேலின் தலையீட்டுடன்தான் இத்தாக்குதல் நடத்தப்பட்டது என பேராயர் கூறவில்லை. சர்வதேச அழுத்தமொன்று இதன் பின்னணியில் இருந்திருக்கக்கூடும் என்றே கூறியிருந்தார். அதேபோல இந்தத் தாக்குதலுடன் இலங்கையில் உள்ள அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் தொடர்புபடவில்லை எனவும் பேராயர் ஒருபோதும் கூறவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கும் என்ற எமது சந்தேகம் மாறவில்லை.

ஹக்கீம் கூறும் கருத்தை கத்தோலிக்க சபை நிராகரிக்கின்றது. அது அப்பட்டமான பொய்யாகும். அரசியல் இலாபத்துக்காக ஹக்கீம் அவ்வாறு தெரிவித்தாரா என்ற சந்தேகமும் உள்ளது. பொய்யுரைக்காமல் தன்னால் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கருத்தை ஹக்கீம் மீளப்பெற வேண்டும் - என்றார். (ஏ-44)

# கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 31

வடமராட்சி, வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் இரவு கேரளக் கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஊரிக்காடு கடற்கரையில் பொதி செய்யப்பட்டிருந்த நிலையில் கஞ்சா மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கஞ்சா 50 கிலோவுக்கும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

மீட்கப்பட்ட கஞ்சா வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஏ-25-100)

# உங்கள் வியாபாரத்துக்காக எம்மை அடகு வைக்காதீர்

## கிழக்கு ஆளுநருக்கு வடக்கு மீனவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 31

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்தியாவில் தனது வியாபாரத்தை தக்க வைக்க வடபகுதி மீனவர்களை அடகு வைக்க வேண்டாம் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு எமது வடமாகாண கடற்றொழிலாளர்களை பாதிக்கும் வகையில் செவ்வியொன்று வழங்கியுள்ளார். இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி வரவில்லை எனவும் மீன்களை பிடிக்கும் போது தற்செயலாக இலங்கை கடற்பரப்புக்குள் சென்று விடுகிறார்கள் என அவர்களின் வருகையை நியாயப்படுத்தி கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவரின் கருத்தை கண்டிப்பதோடு கிழக்கு ஆளுநருக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறோம். நீங்கள் இந்தியாவைச் சேர்ந்தவர் என்பதை சொல்லாமல் சொல்கிறீர்கள். இந்தியாவில் உங்களுக்கு பல வியாபாரங்கள் உள்ள நிலையில் ஊடக நிறுவனங்களிலும் முதலீடு செய்துள்ளீர்கள் என அறியக் கிடைக்கும் நிலையில் உங்கள் வியாபாரத்தை பாதுகாப்பதற்காக எமது மீனவர்களை அடகு வைக்க வேண்டாம்.

இந்தியா எல்லை தாண்டிய மீனவர் பிரச்சினை சுமார் 12 வருடங்களாக நீடித்து வரும் நிலையில் கிழக்கு ஆளுநர் செந்தில் ஒரு நாளிலேனும் எமது மீனவர்களின் பிரச்சினை என்ன என கேட்டிருக்கமாட்டார். அவருக்கு நாங்கள் ஒன்றை கூறுகிறோம் முதலில் யாழ்ப்பாணம் வாருங்கள் எமது மீனவர்களை அழைத்து உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என கேளுங்கள். முடிந்தால் அதனை தீர்த்து வைக்க முயற்சி செய்யுங்கள்.

அதை விடுத்து உங்கள் வியாபாரங்களை தொடர்ந்து இந்தியாவில் மேற்கொள்வதற்கு எமது மீனவர்களை பலிக்கடா ஆக்கவேண்டாம் என்ற செய்தியை அவருக்கு கூற விரும்புகிறோம் - என்றார். (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் இருப்பின்மை: தாமதமானது விதைப்பு

மன்னார், ஒக். 31

**மன்னார்- கட்டுக்கரைக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கால போகச் செய்கையை, தண்ணீர் இன்மையால் இம்முறை காலம் தாழ்த்தி மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

மன்னார் பிரதான குளமாக விளங்கும் கட்டுக்கரைக் குளத் திட்டத்தின் கீழான பெரும்போக பயிர்ச்செய்கைக் குழுக்கூட்டம் அண்மையில் உயிலங்குளம் கட்டுக்கரை திட்டக்குழு அலுவலகத்தில் மன்னார் மேலதிக மாவட்டச் செயலாளர் ய.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயம் மேற்கொள்ளப்படும் இடம், விஸ்தீரணம், நீரின் கொள்ளவு மற்றும் குளத்தின் கீழ்ப் பகுதியில் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய வாய்க்கால்கள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டன. அதன்படி வாய்க்கால் துப்புரவு மற்றும் பராமரித்தலுக்கான இறுதித் திகதி எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதியாகவும் முதல் நீர் விநியோகம் 10ஆம் திகதியாகவும் நிர்ணயிக்கப்பட்டது. அத்துடன் இறுதி விதைப்பு திகதி நவம்பர் 30 ஆம் திகதியாகவும் முதல் தண்ணீர் விநியோகம் டிசெம்பர் முதலாம் திகதியாகவும் இறுதித் தண்ணீர் விநியோகம் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியாகவும் அறுவடை ஆரம்பத் திகதி அடுத்த வருடம் மார்ச் மாதம் 15ஆம் திகதியாகவும் அறுவடை இறுதித் திகதி ஏப்ரல் 15ஆம் திகதியாகவும் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. (ச-213-60)

## மணலுடன் பயணித்த டிப்பர் மடக்கிப்பிடிப்பு

கிளிநொச்சி, ஒக். 31

அனுமதிப் பத்திரத்துக்கு முரணாக மணல் ஏற்றிப் பயணித்த மூன்று டிப்பர்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாகவே கடந்த 28ஆம் திகதி இந்தக்கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஒ-113)

## பருவமழை பொய்ப்பு பெரும்போகம் பாதிப்பு

### கல்மடு விவசாயிகள் ஆதங்கம்

கிளிநொச்சி, ஒக். 31

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு ஒருமாதம் கடந்த நிலையில் இன்னமும் மழை கிடைக்காமையால் காலபோக பயிர்ச்செய்கை பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

புளியம்பொக்கணை கமநலசேவை பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் பெரும்போகப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்மடுக்குளத்தில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றமையால் இயற்கையை நம்பியே இம்முறை பெரும்போகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையிலும் மழை கிடைக்காமையால் பயிர்கள் கருகும்நிலை உருவாகியுள்ளது. பொருளாதார விலையேற்றம் உள்ளிட்ட இடர்களை சந்தித்துள்ள எம்மை இயற்கையும் வஞ்சிக்கின்றது - என்றனர். (ச-113)

# பொலிஸ்மா அதிபர்: பதவிக்கு கடும்போட்டி

கொழும்பு, ஒக். 31

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு எதிர்வரும் திங்கட்கிழமையுடன் நிறைவடைய உள்ள நிலையில், புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் பதவிக்காலம் இந்தமாத நடுப்பகுதியில் நிறைவடைந்திருந்த நிலையில் அவருக்கு மேலும் 3 வாரங்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சி.டி.விக்ரமரத்னவின் பொலிஸ்மா அதிபர் பதவிக்காலம் நீடிக்கப்பட்டது என்று அரசாங்கம் கூறியிருந்தது.

சி.டி.விக்ரமரத்னவின் பதவிக்காலம் இதற்கு முன்னதாக இரண்டு முறை, தலா 3 மாதங்கள் என்ற அடிப்படையில் நீடிக்கப்பட்டது. அதை அரசமைப்புச் சபையும் அங்கீகரித்திருந்தது. எனினும் இறுதியாக ஜனாதிபதியால் வழங்கப்பட்ட சேவை நீடிப்புக்கு அரசமைப்புப் பேரவையின் ஒப்புதல் பெறப்படவில்லை என நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தன.

இந்நிலையில், புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மூவரிடையே கடும் போட்டிகள் உள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான தேசபந்து தென்னகோன், லலித் பதிநாயக்க மற்றும் நிலந்த ஜயவர்த்தன ஆகியோரில் ஒருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று அரசதரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஏ-ஐ)




'அன்னை எப்ப போவார்? திண்ணை எப்ப காலியாகும்?' எண்ட எண்ணத்தோடதான் எல்லாரும் அலைஞ்சு கொண்டிருக்கினம். அரசியலில தான் இப்பிடி அடுத்தவையின்ர பதவியளைக் குறிவைச்சுக் கொண்டு எல்லாரும் காத்திருக்கினம் எண்டால், மெத்தப்படிச்சவை படிப்பிக்கிற கம்பஸிலையும் இதே சீத்துவக்கேடுதான் நடக்குதாம்.

முள்ளிவாய்க்கால் தூபிப் பிரச்சினைக்கு 'பெட்டிசம்' போட்டதும் இந்தப் பதவிப் பிரச்சினையால தானே. இப்ப துணைவேந்தரா இருக்கிறவருக்கு குடைச்சல் குடுக்கவேணுமெண்டதுக்காக போடுப்பட்ட அந்தப் பெட்டிசத்தால், முள்ளிவாய்க்கால் தூபிக்கே பெரும் ஆபத்து வந்திருக்கு. இந்தத் தூபி இருக்கிறது அவசியமோ? உதைக் கட்ட ஆர் அனுமதி குடுத்தது எண்டெல்லாம் இனி துருவித் துருவி விசாரிச்சு, தூபியை ஒருவழி பண்ணிப்போட்டுத் தான் அரசாங்கம் ஓயும் போல கிடக்குது. இந்த ரணகளத்திலையும் தங்கட கிளுகிளுப்பைத் தக்க வைக்கிறதுக்கு ரண்டு குரூப் குறுக்க மறுக்க ஓடித் திரியுதாம். அப்பிடி குறுக்கால ஓடுற ரண்டு குரூப்பும், தியேட்டரில இருக்கிற அமைச்சரிட்ட போய் சப்போர்ட் கேட்டிருக்கினம்.

இந்தமுறை கட்டாயம் தங்களுக்குத்தான் துணைவேந்தர் பதவி கிடைக்கும் எண்டு 'நம்பியிருந்து' கடைசியில 'வடை போச்சே' எண்டு தலையில துண்டைப் போட்ட அந்த குரூப் அமைச்சரிட்ட போயிருக்குது. 'எப்பிடியும் இந்த விசாரணையில துணைவேந்தரின்ர பதவி பறிபோடும்.ஒரு எம்.பி. பதவியை இழந்தால் அவருக்கு அடுத்தபடியா வாக்கு எடுத்தவரைத்தானே புது எம்.பி.யா போடுறவை . அதை மாதிரி இவரின்ர பதவி பறிபோனதும் ரண்டாவதா வாக்கு எடுத்தவரைத்தான் துணைவேந்தராப் போடுறதுக்கு நீங்கள் சிபார்சு செய்யோணும்' எண்டு கேட்டிருக்கினம்.

அதைமாதிரி, இன்னொரு குரூப்பும் அதே அமைச்சரிட்ட போயிருக்கு. அவர் முந்தி துணைவேந்தரா இருந்தவர். அமைச்சரோடையும் கடும் நெருக்கம். 'பாலன்' மாதிரி இருந்து கொண்டு சுந்தரமா தந்திரம் செய்யிறதிலையும் ஆள் விண்ணன். அவர் அமைச்சரிட்ட போய், 'தூபி விசயத்தில துணைவேந்தரை பதவியில இருந்து தூக்கினால், அவரின்ர மிச்சப் பதவிக் காலத்துக்கு 'தகுதி வாய்ந்த அதிகாரியா என்னைப் போட வழி பண்ணுங்கோ' எண்டு நேர்த்தி வைச்சிருக்கிறார். போனமுறை துணைவேந்தரா இருந்த விக்னேஸ்வரனை அரசாங்கம் தூக்கிப் போட்டு, அவரின்ர மிச்சப் பதவிக் காலத்துக்கு தகுதி வாய்ந்த அதிகாரியா பேராசிரியர் கந்தசாமியைப் போட்டமாதிரி, இப்ப தன்னையும் போடலாம் எண்டும் அமைச்சருக்கு அட்வைஸ் சொல்லியிருக்கிறாராம். படிச்சவையைக் கூட பதவி படுத்திற பாட்டைப் பாத்தியளோ?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை நேற்று துவைத்தது ஆப்கன்!

## அரையிறுதிக் கனவு அம்பேல்



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம் பெற்ற ஆட்டத்தில் இலங்கையை எந்தப் பதற்றமும் இல்லாமல் வீழ்த்தி அரையிறுதிக்கான தனது வாய்ப்பைப் பலப்படுத்தியது ஆப்கானிஸ்தான். இந்தத் தோல்வியுடன் இலங்கையின் அரையிறுதிக் கனவு கலைந்துபோகும் நிலையில் உள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆரம்ப வீரர் திமுத் கருணாரத்னவை இழந்தது. பதும் நிசங்க, குசல் மென்டிஸ் இருவரும் இணைந்து அணியை மீட்டெடுத்தனர். அணி 84 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பதும் நிசங்க. குசல் மென்டிஸ் 39 ஓட்டங்களையும், சமர விக்கிரம 36 ஓட்டங்களையும் பெற்று இலங்கையை கௌரவ நிலையை நோக்கி அழைத்துச் சென்றனர். ஆனால் அதன்பின்னர் எந்தவொரு வீரரும் நிதானமாக விளையாடி இலங்கை அணியை கரைசேர்க்க எத்தனிக்கவில்லை. தீக்சன பெற்ற 29 ஓட்டங்களாலும் அவர் மத்தியூஸுடன் வழங்கிய இணைப்பாட்டத்தாலும்தான் ஆப்கானிஸ்தானை எதிர்த்துப் போராடக்கூடிய நிலையை இலங்கை அடைந்தது. இதன்படி இலங்கை அணி 241 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் பரூக்கி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர் குர்பராஸ் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். இந்தத் தொடரில் ஆப்கானுக்குப் பெரும் பலமாக இருந்தவர் அவர். ஆதலால், குர்பராஸின் ஆட்டமிழப்பு ஆப்கானிஸ்தானை நிலைகுலையச் செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இப்ராஹிம் சடான், ரஹ்மட் ஷா இருவரும் இணைந்து அணியைப் பத்திரமாக மீட்டெடுத்தனர். 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சடான். அணி 131 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 62 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் ஷா. அதன் பின்னர் இணைப்பாட்டம் அமைத்த ஷாகிடி மற்றும் ஒமர் ஷாயை இலங்கையின் பந்துவீச்சாளர்களால் பிரித்துவிட முடியவில்லை. இறுதி வரை இருவரும் களத்தில் இருந்து இலங்கையை 7 விக்கெட்டுகளால் தோற்கடித்தனர். சாகிடி 58 ஓட்டங்களுடனும், ஒமர் ஷாய் 73 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)



உதயனின் பரிசுக்குவியல்

தினம் ஒரு பரிசு 27

பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இன்றைய (31.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..........................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தே.அ.இல : ..........................................

தொ.இலக்கம் : ..........................................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..........................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தே.அ.இல : ..........................................

தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

### இன்றைய ஆட்டம்

பாகிஸ்தான் — பங்களாதேஷ்

இடம் : கொல்கத்தா

நேரம்: பி.ப. 2.00

தொடர் தோல்வி எதிரொலி

# பதவியைத் துறந்தார் இன்சமாம் உல் ஹக்!



பாகிஸ்தான் அணியின் தொடர் தோல்விகளைத் தொடர்ந்து, பாகிஸ்தான் அணியின் தலைமைத் தேர்வாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார் இன்சமாம் உல் ஹக்.

53 வயதான இன்சமாம் இதற்கு முன்பு கடந்த 2016 முதல் 2019 வரையில் பாகிஸ்தான் அணியின் தலைமைத் தேர்வாளராகப் பணியாற்றி இருந்தார். இதனிடையேதான் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுத் தலைவராக இரண்டாவது முறையாக கடந்த ஓகஸ்ட் மாதம் நியமிக்கப்பட்டார். பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தால் நியமிக்கப்பட்ட அவரது தலைமையிலான குழுதான் ஆசிய கோப்பை, ஒரு நாள் உலகக் கோப்பை என இரு தொடர்களுக்கு வீரர்களை தேர்வு செய்தது. இந்த இரு தொடரிலும் பாகிஸ்தான் அணி மோசமான செயற்பாட்டை வெளிப்படுத்தியது. தொடர் தோல்வியை அடுத்து பாகிஸ்தான் அணி மீது விமர்சனங்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில்தான் பதவியில் இருந்து விலகியுள்ளார் இன்சமாம் உல் ஹக். (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 25 இன் வெற்றியாளர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| த.சிற்சபேசன் | - | வவுனியா | லி.லரூசன் | - | சாவகச்சேரி |
| ச.நிஷாந் | - | தெல்லிப்பழை | செ.துவாரகன் | - | பருத்தித்துறை |
| சு.சுபரமி | - | உடுவில் | ரி.டர்சன் | - | ஏழாலை |
| ல.வினோசாந் | - | வவுனியா | க.விதுவன் | - | உடுவில் |
| சிறி.பதூஷனன் | - | சுன்னாகம் | எம்.நித்திலா | - | இரணைப்பாலை |
| ல.பியானுகா | - | யாழ்ப்பாணம் | ச.சத்தியபாமா | - | நானாட்டான் |
| ஜெ.தருண் | - | மன்னார் | கே.ஜீவிதன் | - | கட்டுடை |
| [illegible] | - | வேலணை | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இராஜதந்திரம் ப(அ)ழகு!

ஜென்மத்துப் பகையாளிகளை ஒரே பந்தியில் அமரவைத்து – உணவு பரிமாறி – நலம் விசாரித்து வழியனுப்பி வைப்பதென்பது ஒரு கலை. அந்தக் கலை அனைவருக்கும் வராது. உண்மையில் இது உச்சக்கட்ட இராஜதந்திரமும்கூட. இந்த இராஜதந்திரத்தைத்தான் மிக நேர்த்தியாகவும் – இலாவகமாகவும் அண்மைய நாள்களாகச் செயற்படுத்திக்கொண்டிருக்கின்றது இலங்கை. உலகின் ஆகப்பெரும் வல்லாதிக்கச் சக்திகளை மிகமிகச் சாதுரியமாக கொழும்பு கையாண்ட பாங்கு, அதன் துறைமுகங்களில் கடந்தவாரம் வலுவாகவே பட்டவர்த்தனமாகியிருக்கின்றது.

சீனாவின் கடல்சார் ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு இந்தியா கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்தது. இதையடுத்து சீனக் கப்பல் கொழும்பில் நங்கூரமிடும் நடவடிக்கைகள் பிற்போடப்பட்டன. சீனக் கப்பலுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது, சீனக்கப்பலுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது என்று இருவேறு கருத்துகள் இலங்கையின் பாதுகாப்புத் துறையாலும், வெளிவிவகாரத்துறையாலும் தெரிவிக்கப்பட்டு இந்தியாவின் கோபத்தை – அதிருப்தி நிலையை கொஞ்சம் கொஞ்சமாக நீர்த்துப்போகச் செய்தது இலங்கை. நீண்ட இழுபறிகளுக்கு மத்தியில் சீனாவின் ஆய்வுக்கப்பலுக்கு அனுமதி வழங்கப்பட்டு நேற்றையதினம் அந்தக் கப்பல் கொழும்பில் தன் ஆய்வுப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

கடற்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் கடந்த பத்து ஆண்டுகளில் சீனா காட்டும் வளர்ச்சி மிகப்பெரியது. அமெரிக்காவால்கூட சீனத்தின் இந்த வளர்ச்சிக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. இவ்வாறிருக்கையில், இந்தியாவுக்கு நெருக்கமாக – இந்தியாவின் தட்பவெப்பம் உள்ளிட்ட சூழலியல் நிலைமைகளை ஒத்ததான இலங்கைக் கடற்பரப்பில் சீனா மேற்கொள்ளும் ஆய்வு நடவடிக்கைகள் நிச்சயம் இந்தியாவைக் கோபம்கொள்ளவே செய்யும். இவ்வாறானதொரு பின்னணியில் தென்கொரிய மற்றும் ஜப்பானிய போர்க்கப்பல்களை, சீனப் போர்க்கப்பல்கள் தரித்து நிற்கும் சமநேரத்தில், இலங்கையில் நங்கூரமிட அனுமதித்திருக்கின்றது இலங்கை.


சீனாவுடன் முறுகல்நிலையைக் கொண்டுள்ள நாடுகளில் தென்கொரியாவும் ஒன்று. தென்சீனக் கடற்பரப்பில் சீனத்தின் நடவடிக்கைகளை சவாலுக்குட்படுத்துகின்ற நாடுகளில் தென்கொரியா மற்றும் ஜப்பான் நாடுகள் பிரதான பங்காற்றுகின்றன. இவ்வாறிருக்கையில் இந்தக் கப்பல்களையும் அனுமதித்ததன் மூலம், 'நான் சீனத்தைச் சார்ந்தவனல்லன். அணிசேராக் கொள்கையுடையவன்' என்ற செய்தியைத்தான் இலங்கை சர்வதேசத்துக்குச் சொல்லாமல் சொல்லியுள்ளது. இதில், தென்கொரியக் கப்பல், இந்தியா – பசுபிக் மூலோபாய பாதுகாப்புக்கு ஒத்துழைப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டே நங்கூரமிட்டுள்ளது. எனில், இந்தக் கப்பல் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றதே அன்றி சீனத்தின் ஆய்வுக் கப்பலை ஒருதலைப் பட்சமான எண்ணத்துடன் அனுமதிக்கவில்லை என்ற செய்தியையும் பாரதத்துக்குப் பறைசாற்றியுள்ளது இலங்கை.

இலங்கை, தான் வைத்திருக்கும் கடன்கள் மற்றும் நம்பியிருக்கும் பெருஉதவிகள் காரணமாக, இந்தக் கப்பல்களின் வருகையின் பின்னாலுள்ள வல்லாதிக்கச் சக்திகளை எதிர்க்கமுடியாத கையாலாகாத தனத்தில் தற்போது உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இத்தனை கடன்களுக்குள்ளும் – அழுத்தங்களுக்குள்ளும் உச்சக்கட்ட இராஜதந்திரத்துடன் கொழும்பு பயணப்படும் பாங்கு உண்மையில் பிரமிப்பானது. இந்த இராஜதந்திரத்துக்காகவேனும் ரணில் அரசாங்கத்தை எவ்வளவு பாராட்டினாலும் அது தகும் என்பதுடன், சரி பிழை என்பதற்கப்பால், தமிழ்த் தேசியத் தலைவர்கள் கற்கவேண்டிய 'சாணக்கியப்பாடமும்' இதுவேதான்.

## நாளொரு நல்வார்த்தை

தன் அச்சத்தில் இருந்து
மீண்டு வருபவன் தான்
உண்மையிலே சுதந்திரமானவன்.

-அரிஸ்ரோட்டில்-



### தொடர் கைதுகள் எதிரொலி

# இந்திய மீனவர்கள் போராடத் திட்டம்!

**சென்னை, ஒக். 31**

**இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து கடந்த இரு வாரங்களில் சுமார் 60க்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், இந்தக் கைது நடவடிக்கைக்கு எதிராகவும் கைதானவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம் நடத்த முடிவுசெய்துள்ளனர்.**

இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி, ரயில் மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக ராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர். இதன்படி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் மண்டபம் ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் சென்னை ரயிலை மறித்து போராட்டம் நடத்த மீனவர்கள் முடிவு செய்துள்ளனர். மேலும் நவம்பர் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை முதல் மீனவர்களை விடுதலை செய்யும் வரை தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும், தொடர் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் இராமேஸ்வரம் மீனவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஒ-100)

# பயணத்தடை அவமானம் வீரசேகர ரணிலுக்குக் கடிதம்!

கொழும்பு, ஒக். 31

அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முன்னாள் ஜனாதிபதிகள் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் உட்பட இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக விதித்துள்ள பயணத்தடைகள் அவமானகரமானவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

முன்னாள் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ச, கோத்தாபாய ராஜபக்ச, பாதுகாப்புப் படைகளின் பிரதானி சவேந்திரசில்வா உட்பட பலர் இந்தப் பயணத்தடைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் எவருக்கும் எதிராக உள்நாட்டு வெளிநாட்டு நீதிமன்றங்களில் போர்க் குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்தப்படவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கான அரசியல், இராணுவத் தலைமைத்துவத்தை வழங்கியவர்களை அவமானப்படுத்துவதற்காக மேற்குலகம், ஐக்கிய நாடுகள் சபை என்பன மனித உரிமை பிரேரணைகளைப் பயன்படுத்துகின்றன. இலங்கையில் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் ஜெனிவா சாசனம் மற்றும் போர் தொடர்பாக மனித உரிமைகள் பேரவைக்குத் தெளிவுபடுத்த தவறிவிட்டனர் – என்றார். (எ-இ)

**நாளை** **01.11.2023** **புதன்கிழமை** **ஐப்பசி 15**

சுபநேரம் : 04.33 – 06.03
ராகுகாலம் : 12.03 – 01.33

சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்திர ஆக்கக் கண்காட்சி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலைய ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளி, 'அகம்' குழந்தைகள் பகல் நேர காப்பக மாணவர்களின் வருடாந்த சித்திர ஆக்க கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.
கண்காட்சியில் சிறார்களின் நூற்றுக்கணக்கான கண்கவர் சித்திர ஆக்கங்கள், கலைநயம்மிக்க கைவினைப் பொருள்கள் என்பன காட்சிப்படுத்தப் பட்டன. (ச-66)


# பளை முன்பள்ளிகள் முழு நிலா நிகழ்வுகள்

கிளிநொச்சி,ஒக். 31
பளை பிரதேச முன்பள்ளிகள் முன்னெடுத்த முழு நிலா கலை நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன.
கிளிநொச்சி வடக்கு கல்வி வலய முன்பள்ளி உதவி கல்விப் பணிப்பாளர் விஜயநாதன் ஒழுங்கமைப்பில் பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி உதயநிதி லங்கேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.
நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செஞ்சொற் சொல்லருவி ச. லலீசன் பங்கேற்றார். (ச-இ)



# ஒலுமடு பொதுநூலகத்தில் தேசிய மாதப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 31
ஒலுமடு பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.
இதன்போது முன்பள்ளிச் சிறார்களுக்கான கதை கூறல் போட்டி, ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரம், ஒட்டுச்சித்திரம் போட்டிகள் என்பன நடைபெற்று அவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.
அத்துடன் தரம் 6 தொடக்கம் 11வரையான மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகளும் தரம் 4-5 மாணவர்களுக்குரிய நுண்ணறிவு, பொதுவேகம் போட்டிகளும் நடத்தப்பட்டன. (ச)





# ஒரு இலட்சம் பனம்விதை ஆனையிறவில் நடுகை

வன்னி தமிழ்மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'நாளைய சந்ததிகளின் பசுமையான எதிர்காலத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளில் ஆனையிறவு ஏ-9 வீதியில் ஒரு இலட்சம் பனம் விதை நடுகை கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் முதல்வர் பங்கையற் செல்வன், மருத்துவர்கள், கரைச்சி பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர்களான குமாரசிங்கம், இளங்கோ, எழுத்தாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ச-214)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்துபோகும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**இடபம்:** குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்துபோகும். உடல்நலத்தில் கவனம் தேவை. பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனசைவாட்டும். உறவினர்களுடன் பகைமை வந்து செல்லும்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்திசெய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்கநேரிடும்.

**கடகம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி:** சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப்போங்கள். சிலவிஷயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது.

**துலாம்:** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் அமைவார்கள். நன்மை கிட்டும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வெளியூரிலிருந்து நல்ல செய்திவரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**தனுசு:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கும்பம்:** சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்:** கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். அழகும் இளமையும் கூடும். நவீன மின்னணுச் சாதனங்கள் வாங்குவீர்கள்.

# நிர்வாகம்தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 31
குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய பரிபாலனசபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
இதன்போது தலைவராக பரராஜசிங்கம் மயூரன், செயலாளராக செ.சசிகாந், பொருளாளராக இ.முகுந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண முன்பள்ளிகளின் சண்டிலிப்பாய் கோட்ட கிளைச்சங்கத்தின் ஏற்பாட்டில், மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் அண்மையில் ஆசிரியர்தின விழா இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், மாகாணசபை முன்னாள்உறுப்பினர் கஜதீபன், வலி.தென்.மேற்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் பங்கேற்றனர். (ச-125)



ஐஸ்வரியங்களை வாரிவழங்கும் மஹாலட்சுமிக்கான சுமங்கலிய தீபபூஜை உற்சவம் அண்மையில் யாழ். மாவட்டத்திலுள்ள விஷ்ணு ஆலயங்களில் சிறப்பாக இடம்பெற்றது.

ஸ்ரீ வேங்கட வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சீதேவி, பூமாதேவி, மஹாலட்சுமி ஆகிய தெய்வங்களுக்கு விஷேட 108 குங்கும அர்ச்சனைகள், ஆராதனைகள் இடம்பெற்றன. பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகைதந்து தீபாராதனையில் பங்கேற்றனர். (ச-27)




கிளிநொச்சி தருமபுரம் இலக்கம் 1 அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 65ஆம் ஆண்டில் கால்பதிக்கும் கொண்டாட்டம் பாடசாலை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி துர்கா ஜெயரத்னம், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். நிகழ்வின் ஒரு பகுதியாக வரலாற்று நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ச-27)



வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் விசேட தேவையுடையோர்தின நிகழ்வு அண்மையில் கட்டுவன் ஞானோதயா சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலாளர் ச.சிவசிறி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அகல்யா செகராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-9)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'உலகம் வாசிப்பவர்க்கே சொந்தமானது' எனும் தொனிப்பொருளில் கொக்குவில் பொதுநூலகத்தில் கடந்த 14, 15ஆம் திகதிகளில் பல்வேறு வயதுப்பிரிவு மாணவர்களுக்கு வர்ணம் தீட்டுதல், ஆங்கிலச் சொல்லுருவாக்கல், விரைவு கணிதம், கட்டுரை, கிரகித்தல், ஓவியம் வரைதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. (ச)



புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் வாணிவிழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இதன்போது நவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச)



நவராத்திரி விழாவை முன்னிட்டு பருத்தித்துறை புலோலி மேற்கு நாவலர் இலவச பாலர் கல்வி நிலையத்தில் கல்விகற்கும் மாணவர்களிடையே கோலம் போடும் போட்டி அண்மையில் இடம்பெற்றது. (ம-100)



கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோரக்கன்கட்டு கிராமஅலுவலர் பிரிவின் கீழுள்ள குடியிருப்புத் திட்டத்தில் வசிக்கும் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பம் ஒன்றுக்கு, தனது மகளின் பிறந்ததின ஞாபகார்த்தமாக தொழிலதிபர் எஸ்.கே.நாதன் சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியில் வீடொன்றை அமைத்துக் கையளித்தார். (ச-113)



யாழ்.மாவட்டத் திரிசாரணர் குழாமின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் குருதிக்கொடை முகாம் அண்மையில் கொட்டடி முத்தமிழ் வீதியிலுள்ள முன்பள்ளியில் நடைபெற்றது. (ச-66)



மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையத்தின் ஒழுங்கமைப்பில் குருதிக்கொடை முகாம் கடந்தவாரம் நடைபெற்றது. பெருமளவான குருதிக்கொடையாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். (ச-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவேற்பாளர் தேவை

**Hotel** ஒன்றிற்கு **வரவேற்பாளர்**
**(Receptionist)** தேவை.
**(பெண்கள் விரும்பத்தக்கது)**
(ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும).

**TP : 077 256 1990**
**077 581 8769**

(cs.52663(AK:1)

## சாரதி தேவை

Lanka Ashok Leyland ரக Bus ஓட்டுவதற்கு அனுபவமுள்ள சாரதி தேவை.
தொடர்பு: **077 778 9374**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும்.
**இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபா**
**077 334 1281**

## கருத்தரங்கு

*யாழ்ப்பாணம், ஒக். 31*

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மரபுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் மரபுரிமையைப் பாதுகாப்பதில் அருங்காட்சியகத்தின் முக்கியத்துவம் எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் காலை 8 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது. மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைப் பீடத் தலைவர் பாக்கியநாதன் அகிலன் வளவாளராகக் கலந்து கொள்ளவுள்ளார்.*

*(ஒ-66)*

## கண்ணீர்ப் பூக்கள்

ஜனனம் 12 . 11 . 1954



மரணம் 27 . 10 . 2023

இணுவில் கந்தசுவாமிகோவில் பரம்பரைப் பூசகர்களில் ஒருவரும், ஈழத்திருநாட்டின் புகழ்பூத்த அந்தணர் பிரம்மஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் இராமநாதக்குருக்களின் புதல்வர்களில் மூன்றாமவரும், இலங்கையின் பல பாகங்களிலும் பல ஆலயங்களின் மகோற்சவக் குருவாக செயற்பட்டவருமான

### பிரம்மஸ்ரீ ஸ்ரீகந்தராச குருக்களின்

திடீர் மறைவு எம்மை எல்லாம் அதிர்ச்சியுற வைத்தது. அமரர் தம் தொண்டை தொடர்வதற்கு சிறந்த வாரிசுகளை உருவாக்கி வைத்தமை எமக்கு ஆறுதல் தருகின்றது. ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டுதல் செய்வதோடு, அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

**தர்மகர்த்தாசபை,**
**இணுவில் கந்தசாமி கோவில்.**

(N.1)

## மரண அறிவித்தல்

### திருமதி கனேஸ்வரன் புவனேஸ்வரி

**(ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளர்)**



**தோற்றம்** 28.12.1950 — **மறைவு** 30.10.2023

குரும்பசிட்டி வீதி, கட்டுவன் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனேஸ்வரன் புவனேஸ்வரி நேற்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமானந்தம் - ஆசப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கனேஸ்வரனின் மனைவியும், காலஞ்சென்ற அப்புத்துரை - நாகம்மாவின் மருமகளும், நிருயன், கிருஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், கயேந்திரன், மேசினி ஆகியோரின் மாமியாரும், ஜெனிஸ்ரா, ஜெனிஸ்ரன், மேருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, சீவரத்தினம் மற்றும் மனோன்மணி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2023) செவ்வாய்க்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. Road, Subpost Office Lane,
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 9186 009**
**077 4793 758**

(CS 26763)A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 04 . 1948



இறப்பு 30 . 10 . 2023

### கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன்

**(முன்னைநாள் கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்)**

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னைநாள் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் அவர்கள் நேற்று (30.10.2023) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், நவரட்ணம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திலகேஸ்வரியின் பாசமிகு கணவரும், அன்ரன், மைக்கல், சியாமா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சேயோன் (ஆசிரியர், மகாஜனாக் கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும், சரண்யா (ஆசிரியர், பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை) அவர்களின் அன்பு மாமனாரும், ஆர்த்திக்கின் அன்புப் பேரனும், விஜயரட்ணம், லோகேஸ்வரி, இரட்ணேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான தியாகலிங்கம், துரைரட்ணம், இராசரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2023) செவ்வாய்க்கிழமை 702/4, நாவலர் வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் இரண்டு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**தகவல்:**
**மகன் - இ.சேயோன்**
**T.P 077 433 7364**

(CS 26762) A-1

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## தனியார் பாதுகாப்பு சேவை
## பெற்றுக்கொள்ளல் தொடர்பான
# கேள்வி கோரல் - 2024

01. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிட மிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** | : 2023.11.02 - 2023.11.15 நண்பகல் 12.00 மணிவரை |
| **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** | : 2023.11.15 பி.ப 14.00 மணி வரை |
| **கேள்வி திறக்கும் திகதி** | : 2023.11.15 பி.ப 14.30 மணி |

02. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

03. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.

04. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை **வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.**

05. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 2,000.00 இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா 25,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

06. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக ரூபா 450,000/= ஐ செலுத்தி ஒப்பந்தமொன்றை செய்துகொள்ளவேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு **இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டும்) மூலப்பிரதியை அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

08. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.

09. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்

10. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

11. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1. | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகம், புத்தூர் | 01 | 01 | 2024.01.01-2024.12.31 |
| 2. | உரும்பிராய் உப அலுவலகம் | 01 | - | 2024.01.01-2024.12.31 |
| 3. | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையம், நீர்வேலி | 01 | 01 | 2024.01.01-2024.12.31 |
| 4. | கோப்பாய் உப அலுவலகம் | 01 | - | 2024.01.01-2024.12.31 |
| 5. | அக்கரை கடற்கரை சுற்றுலா வளாகம் | 01 | 01 | 2024.01.01-2024.12.31 |
| 6. | அச்சுவேலி தொல்களம், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 01 | - | 2024.01.01-2024.12.31 |
| | மொத்தம் | 06 | 03 | |

இ.பகீரதன்
செயலாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.
2023.10.30

N.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக். 31

வீமன்காமம் தெற்கு தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு அம்மனுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு மான மகா கும்பாபிஷேக பூஜை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-63)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 . 03 . 1949



மறைவு 11 . 11 . 2022

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

### அமரர் சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை

திதி: திருதியை

வாழ்வின் வழிகாட்டியே - உங்கள்
வார்த்தைகளை தொலைத்துவிட்டோம்
அன்பின்பேரொளியே - உங்களை
ஓராண்டாய் தேடுகின்றோம்!
பூக்கள் உதிர்ந்தாலும் - மீண்டும்
புன்னகைக்கும் பூ மரங்களாய்
நாட்கள் கடந்தாலும் - உங்கள்
நினைவுகளை சுமக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!


(ம26758) (N.L)

வசந்தம்
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 . 12 . 1955



மறைவு 01 . 10 . 2023

கடந்த (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் கணபதிப்பிள்ளை மகேந்திரராஜா (சின்னன்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.10.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், சமூக ஊடகங்கள் வாயிலாகவும் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தம்பசிட்டி வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 20 . 11 . 1960



மறைவு 01 . 10 . 2023

அமரர்


### கணபதி அமிர்தலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. அன்னாரது வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (31.10.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி மத்தி,
ஆவரம் பள்ளம்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா (அப்பு)

சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா (அப்பு) அவர்கள் நேற்று (30.10.2023) திங்கட்கிழமை மதியம் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - குணரதி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் தனலட்சுமி தம்பதியரின் மருமகனும், அமுதமலர் அவர்களின் அன்புக் கணவரும், சுஜீவன், அனுரேகா, ஜனனி, விதுஷன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், மயூரி, வினோபாஜி ஆகியோரின் அன்பு மாமனாரும், மாதவன், ரேவிகா ஆகியோரின் அருமைப் பேரனும், இராசேந்திரம், ஜெயபாலசுந்தரம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.11.2023 வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
076 3915 184

(CR 40874) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேல் - ஹமாஸ் மோதல்

# இறக்குமதிப் பொருளின் விலைகள் அதிகரித்தன!

கொழும்பு, ஒக்.31

**இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில் ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகள் மற்றும் இலங்கையில் இருந்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன என்று சர்வதேச சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

ஐரோப்பா மற்றும் கிழக்கை இணைக்கும் சூயஸ் கால்வாய் ஊடாக பயணிக்கும் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கையில் ஈடுபடும் போது சில காப்புறுதி நிறுவனங்களால் காப்புறுதிக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, சூயஸ் கால்வாய் ஊடாக பயணிக்கும் கப்பல்களின் கட்டணம் 5 வீதத்தில் இருந்து 15 வீதமாக அதிகரிக்கப்படும் என சூயஸ் கால்வாய் அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள், எரிவாயு மற்றும் பயணிகள் கப்பல்களுக்கான கட்டணம் 15 வீதமும், சரக்கு கப்பல்களுக்கான கட்டணம் 5 வீதமும் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மோதல் நிலைமை தீவிரம் அடையும் நிலையில் சூயஸ் கால்வாய் ஊடான பயண நடவடிக்கைகள் முற்றாக தடைப்பட்டு இஸ்ரேலிய வான் வெளி மூடப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு நடக்கும் நிலையில் ஆசிய நாடுகளில் இறக்குமதி பொருள்களின் விலை மேலும் அதிகரிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)



## நெடுமாறனுக்கு எலும்பு முறிவு ஸ்டாலின் நேரில் நலம் விசாரிப்பு

சென்னை, ஒக். 31

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் கையில் எலும்பு முறிவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று நலம் விசாரித்துள்ளார்.

மதுரை நாராயணபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் எலும்பு முறிவால் நெடுமாறன் ஓய்வெடுத்து வருகிறார். இந்த நிலையில், தேவர் ஜெயந்தியையொட்டி, மதுரைக்கு நேற்று திங்கட்கிழமை சென்றிருந்த தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின், நாராயணபுரம் பாங்க் கொலனியில் உள்ள அவரது இல்லத்துக்கு நேரில் சென்று நலம் விசாரித்தார். (அ-ஒ-100)

## எம்.பி.க்களுக்கு ஒரு மில்லியன் காப்புறுதி!

கொழும்பு, ஒக். 31

அடுத்த ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வருடாந்த வரவு- செலவுத் திட்டத்தின் ஒதுக்கீடுகளுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இந்த திட்டத்தைச் செயற்படுத்துகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வயது வரம்பில் ஏற்பட்ட மாற்றம், சமூக பாதுகாப்பு வரி திருத்தங்கள் காரணமாக வரித்தொகையில் ஏற்பட்ட மாற்றம் என்பன காரணமாகவே காப்புறுதித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

### சம்பந்தன்...

இடையூறை விளைவிக்கும். அவர் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் ஒரு அடையாளம். அந்த அடையாளத்தை வெளியேற்றினால் அவர் இடத்துக்கு வரக்கூடியவர்கள் எவரும் இல்லை - இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தனது வயோதிபம் காரணமாக பதவி விலகவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ள நிலையில், விக்னேஸ்வரன் நேற்று அனுப்பி வைத்துள்ள கேள்வி - பதில் ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவரது பதிலில், வடக்கு - கிழக்குத் தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் நாடாளுமன்றத்தில் தமது குரலையும் உடலையும் வெளிக்காட்டுவது தான் அவர்களின் கடமை என்று நினைப்பது தவறு. தமிழ் மக்களின் வருங்காலம் நாடாளுமன்றத்தால் அதன் பெரும்பான்மை அங்கத்தவர்களின் விருப்புடன் சுமுகமாக நிர்ணயிக்கப்படப் போவதில்லை. ஊரறிய உலகறிய எமது அவலங்களை வெளிநாட்டு அரசாங்கங்களுக்குத் தெரியப்படுத்தி, இலங்கை சம்பந்தமான பொதுக்கருத்தை வெளிநாடுகளில் எமது புலம்பெயர் சகோதரர் வாயிலாக எழவைத்து எமது நாட்டின் அரசாங்கத்துக்கு போதிய நெருக்குதல்களை ஏற்படுத்தினால்தான் ஏதாவது நடக்கும். சர்வதேசக் குற்ற நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்தினால் எமக்கு நன்மைகள் கிடைக்கலாம். அப்போதுகூட சீனாவிடம் முழுமையாகச் சரணாகதி அடைய சிங்கள அரசியல்வாதிகள் ஆயத்தமாக உள்ளார்கள். தமிழர்களின் உரிமைகளை வழங்குவதிலும் பார்க்க எவரிடமும் நாம் மண்டியிடத் தயார் என்பதே அவர்களின் மனோநிலை.

இந்த விதத்தில் தமிழ் மக்களின் தற்போதைய நிலையை அறிய, அவர்களின் இதுவரை கால அவலங்களை அறிய, அவர்களின் அபிலாஷைகளை அறிய வெளிநாட்டுத் தூதரகங்கள் நாடும் முக்கியமான நபர் சம்பந்தனே. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்கூட அண்மையில் அவர் வாசஸ்தலம் சென்று அவரைச் சந்தித்தார். அவர் பேசுவது விளங்காவிட்டாலும் பக்கத்தில் இருந்து அவற்றை அவர்களுக்கு விளங்கப் படுத்த சுமந்திரன் போன்றவர்கள் முன்வரவேண்டும்.

அவரைப் புறக்கணிக்கவோ நீக்கவோ நடவடிக்கை எடுக்காமல் அவரின் பங்கை தமிழ் மக்களுக்கு நன்மை பயப்பதாக மாற்றுவதே அவரின் பெயரைச் சொல்லி இதுவரை காலமும் அரசியல் நடத்தியோரின் கடமையாகும்.

அவரில் பல குறைகள் இருந்துள்ளன- இருக்கின்றன. ஆனால், யாரிடம்தான் குறைகள் இல்லை? அதுவும் தமிழர்கள் மத்தியில் ஒரு தமிழர் பற்றி இன்னொரு தமிழரிடம் கேட்டால் யாரும் நினையாத குறைகள் எல்லாம் நிறைந்தோடி வெளி வந்து விடுவன.

இதனால்தான் அண்மையில் ஒரு ஊடகம் என்னிடம் கேள்வி கேட்டபோது; இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஒரு கூட்டுத் தலைமை தேவையென்றேன். மாவை சேனாதிராஜா, சிறீதரன், சுமந்திரன் ஆகியோர் அந்தக் கூட்டுத் தலைமையில் இடம் பிடிக்கவேண்டும் என்றும் கூறினேன். தீர்மானங்கள் அவர்கள் மூவராலும் ஒருமித்து எடுக்கப்படவேண்டும் - என்றேன்.

சம்பந்தனை இருக்க விடுங்கள். தற்போதைய நாடாளுமன்றக் காலம் முடிவடையும்போது அவர் அங்கத்துவம் தானாகவே முடிந்துவிடும். திருகோணமலை மக்களின் தேவைகளைப் பார்க்க, பாதுகாக்க சம்பந்தன் ஒரு தகுந்த அமைப்பை உண்டுபண்ணுவார். இல்லை என்றால் அதனை அமைக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி அவருக்கு உதவி வழங்க வேண்டும். சம்பந்தனை வெளியேற்றுவதில் எனக்கு உடன்பாடில்லை.

சம்பந்தன், தனது சுயசரிதையை அல்லது தனது காலத்தில் நடந்த முக்கியமான அரசியல் சந்திப்புகள் பற்றி ஒரு நூலை வெளியிட முன்வரவேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

### வடக்கிலும்...

நிலையில் வடக்கிலும் சில இடங்களில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா பிரதான தபால் நிலையம் முன்பாக அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று மதியம் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. 20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரியும், அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்தும் நாடு பூராகவும் இடம்பெறும் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது, '20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கு, வாழ்க்கைச் செலவைக் குறைத்திடு, மக்களுக்கு நிவாரணம் வழங்கு, மின்சாரக் கட்டணத்தை குறைத்திடு' என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு அரச ஊழியர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ஒ-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதீட்டில்...

ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குமாறு பாதீடு ஊடாக யோசனை முன்வைக்கப்படவுள்ளது எனவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இந்நிலையில் பாதீடு ஊடாக சம்பள உயர்வு வழங்குமாறு வலியுறுத்தி அரச ஊழியர்கள் நாடு தழுவிய ரீதியில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

'பாதீடு ஊடாக அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது என்பதை அறிந்தே ஜே.வி.பி. உள்ளிட்ட தரப்புகள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன. இது தமது அழுத்தத்தால்தான் கிடைத்தது என்ற விம்பத்தை உருவாக்குவதே இதன் நோக்கம்' எனவும் அமைச்சரவையில் ஜனாதிபதி விசனம் வெளியிட்டுள்ளார். (அ-ஒ-44)

## இறப்பு...

தெரிவித்துள்ளது. கடந்த 2 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலேயே குறித்த தகவல் வெளியாகியுள்ளதாக, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2023 ஆம் ஆண்டு ஜூன் வரை இலங்கையில் இறப்புகளின் எண்ணிக்கை சராசரியாக ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 626 ஆகப் பதிவாகியுள்ளபோதிலும், 2022ஆம் ஆண்டு ஜூன் முதல் 2023 ஜூன் வரை இலங்கையில் நிகழ்ந்த இறப்புகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 600 என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும், இந்த உயிரிழப்புகள் படிப்படியாக அதிகரித்து வருவதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. மேலும் நாட்டில் கொரோனாத்தொற்று பரவிய தன் பின்னர் இந்த நிலைமை அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் சராசரி வருடாந்த சனத்தொகை வளர்ச்சி குறைந்துள்ளதாகவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் கூற்றுப்படி, பிறப்பு எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து, இறப்பு படிப்படியாக அதிகரித்து வருகிறது. (அ-ஒ-இ)

## சிங்களக்...

பெரும் பாதகச் செயலில் ஈடுபட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்களின் பாரம்பரிய மேய்ச்சல் தரையான மயிலத்தமடு, மாதவனைப் பகுதியில் சட்டவிரோத சிங்களக் குடியேற்றவாசிகள் குடியேறிய பின்னர் தமிழ் பண்ணையாளர்கள் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தமிழ் பண்ணையாளர்களது கால்நடைகளை இரவோடு இரவாக சுட்டும் வெட்டியும் கொன்று வந்த சிங்களக் குடியேறிகள் தற்போது வாய் வெடி மூலம் கால்நடைகளை படுகாயப்படுத்தும் ஈவிரக்கமற்ற செயலைச் செய்துள்ளனர்.

மயிலத்தமடு பகுதியில் நேற்றையதினம் மேய்ச்சலுக்காக விடப்பட்ட பசு மாடு சிங்கள குடியேறிகளால் வைக்கப்பட்ட வாய் வெடி மூலம் அதன் தாடைப் பகுதி சிதைவடையச் செய்யப்பட்டுள்ளதாக தமிழ் பண்ணையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்திருந்த நிலையிலும்கூட இவ்வாறான அட்டூழியங்கள் தொடர்கதையாகி வருவதாக தமிழ் பண்ணையாளர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். (அ-ஒ-100)

## மின்சாரசபை...

சபை ஊழியரான நௌபர் (வயது-48) என்பவர் உயிரிழந்துள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்துத் தொடர்பில் தெரியவருவதாவது:-

பாதசாரிகள் கடவையில் வீதி ஓரமாக நடந்து சென்றவர் மீது பின்னால் வந்த 'ஹை-ஏஸ்' வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது. முல்லைத்தீவில் மின்சாரசபையில் பணிபுரியும் இந்த ஊழியர் குருமன்காடு கலைமகள் மைதானத்துக்கு அருகில் உள்ள வவுனியா பேருந்து நிலையம் நோக்கி நடந்து சென்ற போதே இவ் விபத்து ஏற்பட்டிருந்தது.

விபத்தில் படுகாயமடைந்து அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-18)

## சீனாவிலிருந்து...

மராட்சி வடக்கு க.தொ.கூ. சங்கங்களின் சமாச பொதுக்கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு க.தொ.கூ. சங்கங்களின் சமாசத்தின் பொதுக் கூட்டம் சமாச அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது சீனாவில் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படும் விவகாரம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. தடை செய்யப்பட்ட சட்டவிரோத தொழில் முறைகள் மற்றும் எல்லைதாண்டிய இந்திய மீனவர்களது மீன்பிடி நடவடிக்கை உள்ளிட்ட பிரச்சினைகளால் வடக்கு மாகாண கடல்வளங்கள் அழிக்கப்பட்டு வருவதுடன் மீனவர்களது வாழ்வாதாரமும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்வதானது மீனவச் சமூகத்தை பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்குவதுடன் பேரழிவுக்குள் தள்ளும்விதமாகவே அமைகிறது.

இலங்கை மீனவ சமூகத்தை பேரழிவில் இருந்து காப்பாற்றும் வகையில் சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன், மீன்கள் இறக்குமதி செய்வதை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் குறித்த தீர்மானத்தை கடற்றொழில் அமைச்சரிடம் நேரில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

## பிரச்சினைக்குத்...

6 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை அஸ்வெசும வாரமொன்றை நடைமுறைப்படுத்த நிதியமைச்சு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடாக அஸ்வெசும நிவாரணப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும் தொழில்நுட்பக் கோளாறு [illegible] தாமதமான குடும்பங்களுக்கும், உடனடியாக நன்மைகளை வழங்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, பிரதேச செயலகங்கள் ஆகியன இணைந்து அஸ்வெசும வாரத்திற்குள் நிவாரணப் பயனாளிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண திட்டமிட்டுள்ளதாக இராஜாங்க நிதியமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை - ஜூலை மாதத்துக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் நிவாரணப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒகஸ்ட் மாதத்துக்கான கொடுப்பனவுகள் வழங்கும் பணி நாளை புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார். (அ-ஒ-26-44)

## வெள்ளை வானில்...

நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணியளவில் 'ஹை-ஏஸ்' வாகனத்தில் சென்றவர்கள், பருத்தித்துறை பிரதேசசபையில் பணியாற்றிவரும் ஈஸ்வரன் என்பவரது வீட்டுக்குள் சென்று உங்களுடைய அடையாள ஆவணங்களைக் காண்பியுங்கள் என்று தெரிவித்து அவற்றைப் பார்வையிட்டனர்.

பின்னர் தொலைபேசிகளைப் பறித்த கொள்ளையர்கள், காணியைக் கொள்வனவு செய்வதற்காக வைத்திருந்த ஆவணங்களைச் சோதித்ததுடன் 5 இலட்சம் ரூபா பணம் மற்றும் ஆறரை பவுண் தங்க நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ-ஒ-27)

## வவுனியாவில்...

வவுனியாவில் திருடப்பட்டு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான ஐம்பொன் சிலை பொலிஸாரால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சிலையின் எடை 35 கிலோ.

யாழ்ப்பாணம், ஐந்து சந்திப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக ஒருவர் நடமாடியுள்ளார். இதுகுறித்து பொலிஸாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது. இதனையடுத்து யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான குழுவினர் அங்கு விரைந்து சென்றனர். சிலையைக் கடத்தி வந்தவர் பொலிஸரைக் கண்டதும் சிலையை அங்கேயே போட்டுவிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளார். சிலையைப் பொலிஸார் மீட்டுள்ளதுடன் சந்தேகநபரைத் தேடி வருகின்றனர். (அ-ஒ-26-27)

## மனிதப்புதைகுழி...

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி நிரஞ்சன், திங்கட்கிழமை (நேற்று) அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்பட இருந்த நிலையில் ராஜ சோமதேவ சமுகமளிக்க முடியாததனால் கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வுப் பணியானது மீளவும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மிகுதியாக உள்ள செலவுத் தொகைப் பணம் எவ்வளவு என்பது தொடர்பாக ஆராயப்பட்டு அதற்கான கணக்கறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

[illegible] அதிகாரி வாசுதேவவால் ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தவிர்ந்த பிற பொருள்கள் பேராசிரியர் ராஜ் சோமதேவவுக்கு இடைக்கால அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தேவை என்ற அடிப்படையில் முழுவதும் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டிருந்தது.

காணாமற்போனவர்கள் சார்பில் நாங்கள் தோன்றி அதன் கட்டுக்காவல் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தோம். ராஜ் சோமதேவவால் குறித்த பகுதியில் 50 மீற்றருக்குள் வேறு மனித எச்சங்கள் இருப்பது சம்பந்தமாக கண்டுபிடிக்கக் கூடிய ராடர் கருவியைக் கொண்டு வருவதற்கான முயற்சிக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

அது தொடர்பான முழுமையான விவரங்களை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கும்படி நீதிமன்றத்தால் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதி மீண்டும் அதற்கான ஒன்றுகூடல் கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு இடத்தில் மேற்கொள்ளப்பட்டு அகழ்வுப்பணி இடம்பெறவுள்ளது. (அ-ஒ-இ)

## உயர் நீதிமன்றில்...

தயாரிப்பதற்கான உத்தரவை தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் நாயகம் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் பதில் வாதங்களை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.


வவுனியா வடக்கில் அமைந்துள்ள வெடுனாகல ரஜமகா விகாரைக்கு சேதம் விளைவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்காக கல்கமுவ சங்கபோதி தேரர் உள்ளிட்டோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த அவகாசம் வழங்கப்பட்டது.

ஏ.எஸ்.துரைராஜா, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்றக் குழுவினால் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளையில், மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தர்ஷன வெரதுவகே நீதிமன்றில் முன்னிலையாகி, பிரதிவாதிகள் முன்வைத்த ஆட்சேபனைகள் தொடர்பான பதில் வாதங்களைச் சமர்ப்பிக்க கால அவகாசம் கோரினார்.

அதன்படி, அடுத்த ஆண்டு மே 25ஆம் திகதி மனுவை மீள விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்ட உயர் நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு, அன்றைய திகதிக்கு முன் பதில் வாதங்களை தாக்கல் செய்ய உத்தரவிட்டது. சமீபத்தில் சிலர் தங்கள் விகாரைக்குள் புகுந்து சிவலிங்கத்தை வைத்து அதன் சொத்துகளைச் சேதப்படுத்தியதாக மனுதாரர்கள் கூறுகின்றனர். இதனால், தொல்லியல் மதிப்புள்ள விகாரையின் மரியாதையும், புனிதமும் பாதிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தெரிவிக்கின்றனர். இதனால், தங்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக தீர்ப்பை வழங்குமாறும், வட மாகாணத்தில் தொல்பொருள் பெறுமதி கொண்ட பௌத்த விகாரைகளை பாதுகாப்பதற்கான வேலைத் திட்டத்தை தயாரிக்க தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவைப் பிறப்பிக்குமாறும் உயர் நீதிமன்றத்தில் மனுதாரர்கள் மேலும் கோரியுள்ளனர். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்குத் தலைவலியாக ஹமாஸின் சுரங்க நகரங்கள்!



டெல்அவிவ், ஒக். 31

**ஹமாஸுக்கு எதிராக காஸாவில் இஸ்ரேல் இராணுவம் மூர்க்கத்தனமான தாக்குதல்களை நடத்திவரும் நிலையில், காஸாவில் ஹமாஸ் அமைத்து வைத்துள்ள சுரங்க நகரங்கள் இஸ்ரேல் இராணுவத்துக்குப் பெரும் தலைவலியாக உருவெடுத்துள்ளன. இந்தச் சுரங்க நகரங்களே ஹமாஸின் செயற்பாட்டுத் தளங்களாக இப்போது மாற்றம் பெற்றிருக்கின்றன.**

இது தொடர்பில் இஸ்ரேல், அமெரிக்க உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாவது:

காஸா பகுதியின் முக்கியமான நகரங்களை இணைக்கும் வகையில் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் பல்வேறு சுரங்கப்பாதைகள் எகிப்து வரை நீள்கின்றன. இதை சுரங்கப் பாதை என்று கூறுவதைவிட சுரங்க நகரம் என்று அழைக்கலாம். சுரங்கப் பாதைக்குள் பிரம்மாண்ட தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இந்த விடுதிகளில் தான் இஸ்ரேலிய பிணைக் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் தீவிரவாதிகளின் ஆயுத கிடங்குகளும் சுரங்கப் பாதையில் உள்ளன. அவற்றில் ஆயிரக்கணக்கான ஏவுகணைகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான சுரங்கப் பாதைகள் சிலந்தி வலை பின்னல்போல கட்டப்பட்டுள்ளன. இந்தப் பாதைகள் எங்கு தொடங்கி, எங்கு முடிகிறது என்பது ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு மட்டுமே தெரியும். வீடுகள், மசூதிகளில் சுரங்கப்பாதைகளின் நுழைவு வாயில்கள் உள்ளன. ஹமாஸ் தீவிரவாதிகளின் தலைமை அலுவலகமும் சுரங்க நகரத்தில் செயற்படுகிறது. சிறிய மருத்துவமனை, மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் சுரங்க நகரத்தில் இருக்கின்றன. இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையால் காஸா பகுதிக்கான அத்தியாவசிய பொருள்கள் விநியோகம் முழுமையாகத் தடைப்பட்டிருக்கிறது. ஆனால் இரகசிய சுரங்கப் பாதைகள் வழியாக எகிப்தில் இருந்து காஸாவுக்கு குடிநீர், உணவு, எரிபொருள், ஆயுதங்கள் உள்ளிட்டவை தொடர்ந்து கடத்தி வரப்படுகின்றன.

இதன் காரணமாகவே ஹமாஸ் தீவிரவாதிகளால் தொடர்ந்து போரில் ஈடுபடமுடிகிறது. மெக்ஸிக்கோவில் இருந்து அமெரிக்காவுக்கு சுரங்கப் பாதை வழியாக போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றன. இந்த சுரங்கப்பாதைகளை அமைக்கவும் ஹமாஸ் அமைப்பினரே உதவி செய்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது - என்றுள்ளன. (ம)

## சுரங்கத்துக்குள் வைத்து ஹமாஸுக்குச் சமாதி!

### இஸ்ரேல் இராணுவம் மிரட்டல்

டெல்அவிவ், ஒக். 31

காஸாவில் முன்னெடுக்கப்படும் தரைவழித் தாக்குதலின்போது, ஹமாஸ் அமைப்பினருக்கு சுரங்கத்துக்குள் வைத்து சமாதி கட்டப்படும் என்று இஸ்ரேல் இராணுவம் பகிரங்கமாக மிரட்டியுள்ளது.

இது தொடர்பில் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்ததாவது:-

காஸா பகுதியில் ஹமாஸ் குழுவினருடன் தொடர்புடைய இடங்களில் தற்போது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன. அடுத்த கட்டமாக காஸா பகுதியில் தரைவழியாக நுழைந்து தாக்குதல் நடத்த இஸ்ரேல் இராணுவம் திட்டமிட்டுள்ளது.

அப்போது ஹமாஸின் சுரங்கப் பாதைகள் பெரும் சவாலாக இருக்கும். இந்தச் சவாலை எதிர்கொள்ள நுரை குண்டுகளை தயார் செய்துள்ளோம். இந்த குண்டுகளில் வெடிபொருள்கள் கிடையாது. அதற்குப் பதிலாக பல்வேறு வகையான இரசாயனங்கள் உள்ளன. ஹமாஸின் சுரங்கப் பாதையை கண்டுபிடித்த உடன் அதன் நுழைவு வாயில்களில் நுரை குண்டுகள் வீசப்படும். இந்த குண்டுகளில் இருந்து நுரை வெளியாகி சுரங்கப் பாதைகளை முழுமையாக அடைத்துவிடும். சுரங்கப் பாதைக்குள் இருக்கும் ஹமாஸ்களால் வெளியேற முடியாது. அவர்களால் எதிர் தாக்குதல் நடத்தவும் முடியாது. சுரங்கத்துக்குள்ளேயே அவர்கள் சமாதியாகும் சூழல் ஏற்படும். ஹமாஸின் சுரங்க நகரத்தை அழிக்க மற்றொரு திட்டத்தையும் ஆலோசித்து வருகிறோம். மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து மோட்டார் பம்புகள் மூலம் ஹமாஸின் சுரங்க பாதைகளில் தண்ணீரை செலுத்தத் திட்டமிட்டு வருகிறோம். சுரங்க நகரம் தண்ணீரில் மூழ்கினால் ஹமாஸின் முதுகெலும்பு உடைந்துவிடும் - என்றுள்ளது. (ம)

## வடக்கில் இனி எப்போதும் மழையை எதிர்பார்க்கலாம்

யாழ்ப்பாணம், ஒக். 31

2023 - 2024 ஆம் ஆண்டுக்கான வடகீழ் பருவக் காற்றுக்கான முதல் சுற்று மழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் தொடங்கியுள்ளது. இம் மழை தொடர்ச்சியாக நவம்பர் 6ஆம் திகதி வரை அவ்வப்போது கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

'இன்று(நேற்று) முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் வட கிழக்குத் திசையிலிருந்து காற்று வீசத் தொடங்கும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மக்கள் இனிவரும் நாள்களில் எந்நேரத்திலும் மழை கிடைக்கலாம் என்ற எடுகோளைக் கருத்திற் கொண்டு அதற்கான முன்னேற்பாடுகளுடன் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்தது' எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ஔ-66)

## நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணம் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் ஆரம்பத் தலைவர் அமரர் சு. நடேசு, மறைந்த பொதுமுகாமையாளர் சந்திரராசா ஆகியோரின் நினைவுதினம் இன்று மு.ப. 11 மணியளவில் கொத்தணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் மு.சந்திரசேகரம் கலந்துகொள்ளவுள்ளார். (ம-63)

பணியாளர் தேவை
யாழ் பருத்துறைவீதியில் உள்ள Shop ஒன்றிற்கு பணியாளர் (பெண்) தேவை.
தொடர்பு : 077 867 9701

அமெரிக்க லொத்தர் விசா
இன்னும் 07 நாட்கள் மட்டுமே
*பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
*அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. T.P: 0777 55 45 28

03 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
V2 Travels
0768226244
0768226241

வீடு வாடகைக்கு உண்டு
கொக்குவில் கிழக்கு, கோணாவில் ஒழுங்கை 300m தூரத்தில் (மருத்துவ பீடத்திற்கு முன்பாக) அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.
077 917 9424



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.